# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/02)**

அ. மேல் மாகாண பாடசாலைகளில் அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத்தின் கீழ் நிர்மாண நடவடிக்கைகளாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் யாவை ?

ஆ. அச் செயற்றிட்டங்களுக்கு உரியதாக அந்தந்த பாடசாலைகளுக்கு இணங்க முன்னேற்றங்களைக் காட்டும் அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொடுப்பீர்களா ?

இ. முழு செயற்றிட்டங்களின் எண்ணிக்கைக்கு இணங்க வேலைகள் நிறைவு செய்த செயற்றிட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. அதன் முன்னேற்றம் சதவீதமாக எவ்வளவு ?

உ. வேலைகள் நிறைவு செய்யப்படாது இடை நடுவில் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் எத்தனை என்றும், அதற்குக் காரணம் என்ன என்றும், இந்த கௌரவ சபைக்கு கருத்து தெரிவிப்பீர்களா ?

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/03)**

அ. கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் எல்லையினுள் குமா ஸ்டிகர்ஸ் என்ற பெயர் கொண்ட தாபனம் பிரசார / விளம்பர பலகைகள் பலவற்றை பொருத்தியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அத் தாபனத்திற்காக கட்டுநாயக்க சீதுவ நகர சபையின் அதிகார பிரதேசத்தினுள் விளம்பர பலகைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சதுர அடிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. அவ் விளம்பரப் பலகைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சதுர அடிகள், கேள்வி ஒழுங்கு விதிகளின் கீழா அல்லது வேறு முறை ஒன்றின் கீழா ஒதுக்கப்பட்டுள்ளன ?

ஈ. இவ் விளம்பர பலகைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கால எல்லை எவ்வளவு ?

உ. இத் தாபனம் விளம்பரப் பலகையின் பிரசார நடவடிக்கையை தொடங்கிய வருடம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கட்டுநாயக்க சீதுவ நகர சபைக்கு செலுத்தியுள்ள நிதியின் அளவு வருட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு ?

ஊ. அவ் ஒவ்வொரு வருடங்களுக்குமாக விளம்பர பலகையைப் பொருத்துவதற்கு அத் தாபனத்திற்கு இடம் வழங்கிய முறை, சதுர அடியின் அளவினை வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

எ. இவ் வேளையில் அத் தாபனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை நிறைவடைந்திருந்தால் அவ் விளம்பரப் பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பு திருத்தப்பட வேண்டும் என இந் நாட்டின் இடதுசாரி அரசியல் கட்சிகளும் அதேபோல் வலதுசாரி அரசியல் கட்சிகளும் அதிகளவாக பேசுவதுடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை இல்லாதொழிக்கச் செய்ய வேண்டும் என பலமான ஆர்ப்பாட்டங்களும் நாட்டினுள் நடாத்தப்படுகின்றன. இதன் கீழ் இந் நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கும், ஜனாதிபதியிடம் காணப்படும் வரையரையற்ற அதிகாரத்தினை பாராளுமன்றத்திற்கு கையளிப்பதற்கும், கடந்த தேர்தலில் உறுதிமொழி அளிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக உறுதிமொழி அளித்த முன்னைநாள் ஜனாதிபதி எவரும் அதனை இல்லாதொழிக்காத போதும் தற்போதைய ஜனாதிபதி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கு ஏற்ற முறையில் அமுல்படுத்தப்பட்டிருந்த 18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இல்லாதொழித்தது சிறந்த முறை ஒன்றாகும். தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர், நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு இணங்க எல்லா கட்சிகளையும் ஒன்று சேர்த்து அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றினைக் கொண்டு வர சிறந்த நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் சுய அரசியல் இலாபங்களை இல்லாதொழித்து இந் நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு எல்லா மக்களும் ஒன்று சேர வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/10)**

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இலங்கையானது 2500 வருடங்களை விட பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்ட நாடொன்று என கூறிக் கொண்டாலும், எங்களின் பின்னர் வரும் பரம்பரையினருக்கு அபிமானம் மிக்கதானதொன்றானது என வர்ணிக்கக் கூடிய எதிர்காலம் ஒன்று ஏற்படக் கூடியமுறையில் தற்போதைய அரசியல் தலைவர்களான எங்களினால் நாட்டினைக் கட்டியெழுப்புவது மேற்கொள்ளாத விடத்து அது எங்களது பொறுப்பினை தட்டிக் களித்ததாகவே ஏற்படும். எனவே தேசிய செல்வம், அதிகாரம் மற்றும் எங்கள் யாவரினதும் இயலுமையை உச்ச அளவில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்தி பலம் மிக்க பொருளாதாரத்தை கட்டியெழுப்பி ஒவ்வொரு முறையும் ஏற்படும் வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை விபத்துக்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை முன்னரே அறிந்து தேசிய கொள்கை ஒன்றினூடாக இந் நாட்டின் இன, சமய, சமூக இயக்கங்களை ஒன்று சேர்த்து நல்லிணக்கத்தினுடனான ஒரு வழியாக இலங்கையின் எதிர்காலத்தினை பாதுகாத்துக் கொண்டு விரைவான முன்னேற்றமொன்றினை நோக்கி இந் நாட்டினை கொண்டு செல்ல எல்லா மக்கள் பிரதிநிதிகளும் முன்னணி ஒன்றாக வேண்டும் எனவும், அதற்கான வேலைத் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/11)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.02.07** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.